**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 50/2024 D.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பிரித்தி லோஷினி | க–பெ | பாலகோபால் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 39/25 | வட்டம்: | |
| தொழில்: | : | | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.03.2025**

-----------------------------------------------------------------------------------------------

<u>**18.03.2025**</u>

<u>**முதல் விசாரணை**</u>

புகார்தாரர் பாலகிருஷ்ணன் என்பவரிடம் 2019 ம் ஆண்டு வாக்கில் ரூ.2,96,000/– கைமாற்றாக வாங்கினேன். அக்கடனை 2021 ஜனவரி மாதத்தில் யுவலோஷினி வங்கி கணக்கிலிருந்து ஜிபே மூலம் ரூ.1 லட்சமும், ரூ.20 ஆயிரமும் செலுத்தியிருக்கிறேன். எனது பாரத ஸ்டேட் வங்கி ஜிபே கணக்கு மூலம் புகார்தாரருக்கு அவ்வபோது தொகைகள் மொத்தம் ரூ.1,37,815/– செலுத்தியிருக்கிறேன். இதுதவிர ரொக்கமாக ரூ.44,900/– புகார்தாரரிடம் செலுத்தி கணக்கை முடித்துக்கொண்டேன். புகார்தாரர் அனுப்பியதாக சொல்லும் அறிவிப்பு எதுவும் எனக்கு கிடைக்கவில்லை. நான் அஞ்சலக ஒப்புதல் அட்டையில் கையொப்பம் செய்து சட்டஅறிவிப்பை பெறவில்லை. நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்ற அழைப்பாணை போஸ்ட்மேன் எனக்கு போன் செய்து தெரிவித்தன் மூலம் நான் நேரடியாக பெற்றுக்கொண்டேன். நான் ஐடி கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்ததால் புகார்தாரர் அவரது மகனிற்கு வேலை ஏற்பாடு செய்ய கோரியிருந்தார். புகார்தாரரின் மகன் தேர்ச்சி பெறாததால் அவருக்கு வேலை கிடைக்கவில்லை. இதனால் என்மீது காழ்புணர்ச்சி கொண்டு நான் வேலை செய்த

நிறுவனத்திற்கு நேரடியாக வந்தும், புகார்தாரருக்கு நான் பணம் செலுத்த வேண்டியிருப்பதாக பிரச்சனை செய்து அலுவலகத்தில் எனது பெயரை கெடுத்துவிட்டார். இதன்காரணமாக வேலையை விடும் சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது. புகார்தாரர் ஜிகே மூப்பனார் சமூகத்தை சேர்ந்தவர் என்பதால் காவல்நிலையம் மூலம் எனக்கு பிரச்சனை கொடுத்து காவல்நிலையத்தில் வைத்து என்னிடமிருந்து மூன்று வெற்று காசோலைகள் பெற்றுக்கொண்டனர். மேற்படி காசோலைகளில் நான் கையொப்பம் செய்யவில்லை. இதை அடிப்படையாக கொண்டு என்கணவர் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். பவர் ஏஜெண்ட் ஞானசேகரன் என்பவரை நான் இதுவரை பார்த்ததில்லை. புகார்தாரரிடம் வாங்கிய கடனை நான் முழுவதுமாக திருப்பி செலுத்திவிட்டேன். புகார்தாரரின் மகனிற்கு வேலை கிடைக்காததால் என்னை வெகுகாலமாக எனக்கு தொந்தரவு கொடுத்துவருகிறார்.

**முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's))
விரைவு நீதிபதி காரைக்குடி